www.tamilarangam.net

# ஈழப்போராட்டத்தின் இன்றைய நெருக்கடி:

# தேக்கமா? திருப்புமுனையா?

ஜனப்பிரியன் வெளியீடு
மே ,1986

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்களின் தேசியவிடுதலைப்போராட்டம் இன்று ஒரு நெருக்கடி நிலையை அடைந்துள்ளது. எமது போராட்டத்தின் ஆரோக்கியமற்ற போக்குகள் உச்ச நிலையை அடைந்ததினால் முழு இனமே வெட்கித்தலைகுனிய வேண்டிய அழித்தொழிப்பு நடவடிக்கைகள் ஈழமண்ணில் இன்று நடைபெறுகின்றன.

தேசிய விடுதலைப்போராட்டத்தையே கேள்விக்கிலக்காக்கும் இந்நிகழ்வுகளைப் பலர் கண்டு கொள்ளாமல் விடுவதும், நியாயப்படுத்துவதும், மேலும் அச்சம்தருவதொன்றாகும்.

மக்கள் இந்நிகழ்வுகள் குறித்து சுதந்திரமாகவும், பகிரங்கமாகவும் கருத்துக்கூறக்கூடிய ஒரு சூழல் தமிழீழமண்ணில் இன்று இல்லை. இவற்றைச்செய்யும் தீயசக்திகளுக்கெதிரான விமர்சனங்களும், கண்டனங்களும் கூட, வெறும் சடங்குகளாக, சம்பிரதாயங்களாக நடந்துமுடிந்து போகின்றன. எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கட்டம்- போக்குகள்- இன்றைய நெருக்கடி நிலைமையை ஓர் ஆரோக்கியமான திருப்புமுனையாக மாற்றியமைப்பதற்கான வாய்ப்புகள்-தடைகள் பற்றிய அரசியல் கருத்துப் பரிமாற்றம் ஒரு பரந்த மட்டத்தில் செய்யப்பட வேண்டும்.

இத்தகையதொருமுயற்சியின் ஆரம்பவேலையாகவே இப்பிரசுரத்தை நாம் வெளியிடுகிறோம். இப் பிரசுரத்திற்குச் சார்பான-எதிரான கருத்துக்களை வரவேற்கிறோம். இப்பிரசுரம் எமது போராட்டத்தின் பல பிரச்சினைகளை மேலோட்டமாகவே தொட்டுச்செல்கிறது.

இதில் இனங்காணப்பட்ட பல பிரச்சினைகள் பற்றி மேலும் விரிவான சில பிரசுரங்களையும் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

## எழுந்து வருக!
## இனியாவது ஒரு விதி செய்வோம்!

முழுத் தமிழ் மக்களினதும் மனங்களைப் பிடித்து உலுக்கிய மிலேச்சத்தனமான சம்பவமொன்று மீண்டுமொருமுறை நடந்து முடிந்துள்ளது. மேலும் மேலும் அச்சமும் அவலமும் அதிகரித்துவரும், முழுத்தமிழ் மக்களின் இருப்பிற்கான நிலைமைகளே மிகவும் இக்கட்டாயுள்ள- இருட்டான ஒரு சூழலில், வெறிபிடித்த 'தமிழ்' இயக்கமொன்றின் காடைத்தனம் இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களைப் பலிவாங்கியுள்ளது.

அநியாயமாகப் பலிபோகும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களையும் அதிகரித்துவரும் அரசு அடக்குமுறையையும் எதிர்கொண்டு வெல்லவேண்டிய இந்த 'விடுதலை வீரர்கள்!', தமது சக விடுதலை இயக்கமொன்றினை அடித்து நொருக்கி வெற்றி பெற்றுள்ளதாக வெற்றிமுரசு வேறு கொட்டியுள்ளனர்.

குறிப்பிட்ட கடத்தல் சம்பவமொன்றும், சில கொலை-கொள்ளைகளும் இதன் காரணமாகக் கூறப்படுகின்றனவெனினும் இவை இத்தகைய செயல்களை எவ்வகையிலேனும் நியாயப்படுத்தா. அரச அட்டூழியங்களையும் மீறிய சுத்த ராணுவப் பயங்கரவாதமே இது. இவ் அழித்தொழிப்பு வேலைகள் இடம்பெற்ற விதமும், இதன் சூத்திரதாரத் தலைமையின் கறை படிந்த முன்னைய வரலாறும், சுந்தரம், ஒபரோய்தேவன், ஜெகன், மனோ மாஸ்டர், ரூபன், றேகன் மற்றும் இன்னமும் அறியப்படாத அழிப்புகளில் இரத்தம் தோய்ந்த இவர்களின் கரங்களும் இதனையே நிலைநிறுத்துகின்றன. மனித நேயமுள்ள அனைத்து மக்களாலும் மீண்டும் மீண்டும் - உரத்து உரத்துக் கண்டிக்கப்படவேண்டிய மிலேச்சத்தனமான வெறிச்செயலிது. தமிழீழமல்ல - தமிழினமொன்றின் இருப்பிற்கான நிலைமைகளையே அற்றுப்போகச் செய்யும் ஆபத்தான நிலையொன்றினையே இது தோற்றுவித்துள்ளது.

இவை நடந்து முடிந்த இரண்டு மூன்று தினங்களும் விரக்தியிலும் வெறுப்பிலும் குழம்பி, அசூசையுற்று-மௌனமாயிருந்தவர்கள் மீண்டும் கட்சிகட்டும் வேலைகளில் இறங்கியுள்ளனர். வாதப்பிரதிவாதங்களும், கண்டனங்களும், காரணங்களும்- காட்டுக் கூச்சலும் இச்சம்பவத்தையொட்டி மீண்டும் மெதுவாகக் களைகட்டத் தொடங்கியுள்ளன.

'தமிழர் அரசியலுடன்' பரிச்சயமான எவர்க்கும் இவையும், இவற்றின் பின்னரானவையும் புதியனவயல்ல. இவை 'தமிழர் அரசியலுடன்' ஆரம்பமானவை. தமிழ்நாட்டிலிருந்து கொண்டு இன்று இவற்றுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் தமிழ் பாராளுமன்ற அரசிய லடிவருடிகளே இவற்றின் ஆரம்ப கர்த்தாக்களாக இருந்துள்ளனர். 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழீழத்திற்கான 'ஜனநாயக' வாக்கெடுப்பிலே ஓட்டுக்கள் திருடுவதற்கு இவர்கள் புரிந்த ஊழலும், மோசடியும்- வன்முறையும் நியாயப்படுத்தியுள்ள எந்தவொரு மனிதனும் மறக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடியாதவை. தமது அரசியல் விரோதிகளிற்கெதிராக 'தம்பி'மார்களின் துப்பாக்கிகளைத் திருப்பிக் கற்றுக்கொடுத்தவர்கள் இவ் 'அண்ணா'விகளே. இதுவரை நடைபெற்ற பல அரசியல் கொலைகளின் பின்னணியில் இவர்களின் கரங்களிருந்ததை இந்த இயக்கங்களே அம்பலப்படுத்தியுள்ளன.

எதிரிகளல்ல; துரோகிகள் ஒழிப்பே இவர்களின் நீண்டகால அரசியல் கோஉடிமாயிருந்திருக்கிறது. இவைகளும் அண்மைக்காலங்களில் மிக வேகமாக விகாரமடைந்து வந்துள்ள தமிழ் அரசியற் போராட்டத்தின் இன்றைய இந்நிலைமைகட்கு வித்திட்டவை.

இயக்கங்களைத் துடைத்தழிக்கும் முயற்சிகள் இதற்கு முன்னரும் நடைபெற்றிருக்கின்றன. எனினும் இவை பல்கிப்பெருகி வந்துள்ளனவேயன்றி எண்ணிக்கையில் குறையவில்லை.

இன்னமும் இவை 'இளைஞர் குழு'க்களாகவே உள்ளன. மக்கள்போராட்டம் ஒன்று பற்றிப் பேசினும், இவை மேலும் மேலும் மக்களிடமிருந்து அந்நியப்பட்டே வந்துள்ளன.

இவை அனைத்துமே 'மார்க்சிசம்' பேசுகின்றன.

இவ் இயக்கத்தலைமைகளின் விருப்புக்கள் எல்லாம் இவர்களின் அரசியலாயுமிருந்திருக்கிறது.

இவர்கள் கட்சி பேதமின்றி கொலை, கொள்ளை, கடத்தல் சம்பவங்களில் கூட ஈடுபட்டு வந்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் போட்டியும், பொறாமையும், பூசலும் இவர்களிடையில் அதிகரித்து வந்துள்ளது.

பொதுமக்கள் புழக்கத்தில் இவர்கள் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டிருக்கின்றனர். பொதுமக்கள் சென்ற ஊர்வலம் ஒன்றின் மீதுகூட துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்திருக்கிறது. அரச ராணுவம் கூட இதுவரை இதனைச் செய்திருக்கவில்லை, எவ்வகையான ஈனச் செயலையும் செய்துவிட்டு அவற்றை நியாயப்படுத்தி அறிக்கை விடுவது இவர்களுக்கு இலகுவாம் இருந்திருக்கிறது. இயலாதவை, 'வலு குறைந்த', 'சிறிய' - 'மாற்று' இயக்கங்கள் மீது சுமத்தப்பட்டன.

ஆனைவிழுந்தானில் அப்பாவிப் பெண்களைக் கற்பழித்துக் கொன்று புதைத்தது அரச ராணுவமல்ல.

சுழிபுரத்தில் ஏதுமறியா இளைஞர்களை வெட்டிக் கொலை செய்தவர்கள் யாரெனபது இன்று எல்லோருக்கும் தெரிந்ததொன்று.

இவர்களின் சித்திரவதைகளும், 'வதைமுகாம்' கதைகளும் மனித நாகரீகங்களைத் தலை குனிய வைப்பவை.

நீண்டு செல்லும் இவைகளின் பட்டியல் இன்னமும் இரகசியமானவையல்ல.

இவைகளைத் தடுத்து நிறுத்தப்போவது யார்?

'தவிர்க்கமுடியா இழப்பு'களின் பட்டியலில் இவையும் சேருமா?
ஈழப் போராட்டத்தை இவை எவ்வாறு முன்தள்ளும்?



இடையிடையே இவைகட்கெதிராக எழுந்த ஈனக் குரல்கள் அடித்து நொருக்கப்பட்டன. ஏன் என்று கேட்ட இயக்கப் போராளிகள் இத்தலைமைகளாலே இல்லாதொழிக்கப் பட்டுள்ளனர்.

இதுவரை இவர்கள் கொன்றொழித்த இப் போரராளிகளின் எண்ணிக்கை என்ன?

இவைகட்கெதிராக மக்கள் சிறிதளவில் கதவடைப்பு, உறர்த்தால், உண்ணாவிரதங்கள் கூட நடாத்தியுள்ளனர். எனினும் இவை நிறுத்தப்படவில்லை. மாறாக அதிகரித்தே வந்துள்ளன. இச்சம்பவங்களின் தொடர்ச்சியே மக்களை மௌனமாயிருக்க நிர்ப்பந்தித்தது.

இவைகளின் தொடர்ச்சியாகவே அண்மைய - இயக்கங்களின் துடைத்தழிப்பு வேலைகள் நடைபெற்றுள்ளன. தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது சொந்த வாழ்க்கையை உதறித் தள்ளிய தமிழ் விடுதலைப் போராளிகள் நூற்றுக்கு மேற்பட்டோரும், பொது மக்கள் சிலரும் கொல்லப்பட்டுள்ளனர். எஞ்சியோர் ஈழ அரசியலுடன் தொடர்புகொள்ளக் கூடாது என எச்சரித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 'சிறிய' இயக்கங்கள் இரண்டொன்றும் சரணடையுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

இதனைச் செய்ய இவர்களுக்கு ஆணையிட்டவர்கள் யார்?

இவ்வளவு ஈனச் செயல்களையும் இவர்கள் மக்களின் விருப்பெனக் கூறுவதே வேடிக்கையானது. தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் இனவெறியன் ஜேஆர் கூட சிங்கள மக்களையே சாட்சிக்கு அழைத்துள்ளான்.

தமிழ் மக்களின் 'தனி இயக்கமாக' மிளிர விரும்பும் இவர்களின் மனவிருப்பு மக்களிற்குப் புரியாததொன்றல்ல. அனைவரும் ஒன்றாக ஒருமித்தெழுவது அவசியமே. துப்பாக்கிமுனையில் இதர இயக்கங்களைத் துடைத்தழிக்க முனையும் இத்தகைய செயல்கள் இவ்ஒற்றுமையை ஏற்படுத்தா. இவை அரசியல் அரிச்சுவடியில் இவர்களிற்குள்ள அறிவு பற்றிய ஐயுறவையே ஏற்படுத்துவன.

இவைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்!

இவ்வளவு இடர்களின் மத்தியிலும் இளைஞர்கள் பலர் அரசியற் தெளிவுடன் இவ் அராஜகக் கும்பல்களிடமிருந்து விலகி வருவது நல்ல அறிகுறியொன்று. இன்னமும் மக்களிடம் முழுமையாகச் சென்றடையாமலிருக்கும், எண்ணிக்கையில் சிறிய இயக்கங்கள் சிலவும் நம்பிக்கையூட்டுவன.

இவர்களை நோக்கி எமது கவனம் திருப்பப்படவேண்டும்!

எழுந்து வருக நண்பர்களே!

இனியாவது ஒரு விதி செய்வோம்!

---

www.tamilarangam.net



## இன்றைய நிலையைப் புரியவும்........
## நாளைய போக்கை நிர்ணயிக்கவும்........

சில வாரங்களுக்கு முன் தமிழீழ மண்ணில் நூறுக்குமேற்பட்ட இளம் போராளிகள், பொதுமக்கள், குழந்தைகள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட செய்தி தமிழீழத்திலும் உலகெங்கிலும் வாழும் எல்லாத் தமிழரையும் அதிர்ச்சியுற வைத்துள்ளது. சிங்கள இனவாத அரசின் கொடிய அடக்கு முறை உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் எதிரிக்கெதிராகப் பயன்படுத்தப்படவேண்டிய இவ்வாயுதங்கள் எம்மீது— சக போராளிகள் மீது திருப்பப்பட்டுள்ள அவல நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது. எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் அடிமைகளாக வாழும் ஈழத் தமிழர்கள் தமது விமோசனத்திற்கு இவ்விளம் போராளிகளையே முழுமையாக நம்பியிருந்தனர். இன்று தமிழ் தேசியத்தினுள்ளேயே உருவெடுத்திருக்கும் இப்புதிய அடக்கு முறையை எப்படி எதிர் கொள்வது எனத் தெரியாமல் மக்கள் குழப்பமடைந்துள்ளனர். துப்பாக்கி முனையில் பணயக் கைதிகளாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள், இந்த எதேச்சாதிகார வன்முறையை எதிர் கொள்ள தம்முள்ளே உண்மையான அரசியல் விழிப்புணர்வையும் மக்கள் அமைப்புக்களையும் கொண்ட ஒரு தயார் நிலையில் இல்லை என்பது மிகவும் விசனத்திற்குரிய உண்மையாகும். காலங்கடந்த இந்நேரத்திலாவது, இச் சீரழிந்த நிலைமைகள் ஏன் ஏற்பட்டன? இவை எங்ஙனம் நிவர்த்தி செய்யப்படலாம்? என்ற கேள்விகள் எம்மனத்தில் எழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இன ஒடுக்கல் அதன் எல்லாக் கொடிய பரிமாணங்களிலும் உச்ச நிலையை அடைந்துள்ள இச்சமயத்தில் உண்மையான தமிழீழ விடுதலைக்கு தொடர்ந்து போராடுவதென்பது தவிர்க்க முடியாததொன்று. இதற்கு அரசியல் தரகர்களினால் நடாத்தப்படும் ராஜதந்திர அரசியலின் விளைவாக ஏற்படும் அரைகுறைத் தீர்வுகள் மாற்று வழிகளல்ல. இன்றைய நெருக்கடி நிலைமை கூட எமது அரசியல் விழிப்புணர்வை காத்திரமானதாக்கக் கூடிய ஓர் திருப்பு முனையாகக் கையாளப்பட வேண்டும். அதாவது எமது தவறுகளையும் பலவீனங்களையும் கிரகித்து அப்புரிந்துணர்வின் அடிப்படையில் இத்தற்காலிக பின்னடைவுகளைப் போராட்டத்தின் திருப்பு முனைகளாக்கி வெற்றிகரமாக முன்னேறும் தகைமையைக் கொண்டிருத்தலே நாம் முதிர்ச்சியடைந்து வரும் ஓர் தேசிய இனமென்பதற்கு அறிகுறியாகும்.

இன்று எம்மத்தியில் பலர் இக்காட்டுமிராண்டித் தனமான நிகழ்வுகளைக் கண்டு விரக்தியடைந்து, போராட்டமே வேண்டாம் ஏதாவதொரு சமரசத் தீர்வுடன் திருப்தியடைந்து கொள்வோம் இது எமது இனத்தின் 'விதிப்பயனே' என்று நொந்து கொள்கின்றனர். அரச பயங்கரவாதத்திற்கும் விடுதலைக்குப் போராடுபவர்கள் என்று கூறிக்கொள்ளும் எதேச்சாதிகார வன்முறையாளரின் கொலை வெறிக்குமிடையில் சிக்கித் தவிக்கும் பெரும்பான்மையானவர்கள் இந்நிலைக்கு தள்ளப்படுவது இயல்பானதே. நெடுங்காலமாக நாம் வரித்துக் கொண்ட எமது அரசியல் தலைமைகள், அவை பாராளுமன்ற கட்சிகளாயிருந்தாலென்ன ஆயுதந் தாங்கிய இளைஞர் குழுக்களாயிருந்தாலென்ன எம்மை வெறும் பார்வையாளராக மட்டுமே பாவித்திருக்கின்றன.

அரசியலில் தீவிரமாக பங்குபற்றி பழக்கமில்லாதவர்களாகிய நாம் தேர்தல் மேடைகளில் அழகிய கோஷங்களைக் கேட்டு சிறு பிள்ளைகள் போல் கை கொட்டி மகிழ்ந்தோம். பின்பு நேர்த்தியான தாக்குதல்கள் கண்டு மெய் மறந்து புளகாங்கிதம் அடைந்தோம். எம்மை இது எங்கு கொண்டு செல்லும்? இனி என்ன நடக்கும்? என எம்முன் அழகாக அபிநயித்த இந்தச் சித்து விளையாட்டு நாயகர்களைக் கேட்டோமில்லை. இவ்வளவு காலமும் எம்மினம் முழுவதுமே தம்மையே தாம் ஏமாற்றும் இனிய மாயவலையொன்றுள் உழன்று கொண்டிருந்துள்ளது. இன்று இந்த மாயைகள் எல்லாம் உடைந்தவுடன் மாற்று வழி தெரியாது விழிக்கின்றோம். இச் சிக்கலிலிருந்து எம்மை விடுவித்து வெற்றிகரமாக முன்னேறுவதற்குப் பதிலாக பின்வாங்கும் சுலபமான வழியைத் தேடுகின்றோம்.

எமது இந்த இக்கட்டான நிலையை தமக்கு சாதகமாக்கிக் கொள்ளுவதற்காக ஏறக்குறைய அரசியல் வனாந்தரத்திற்குள் ஒடுங்கிவிட்ட பாராளுமன்ற கட்சித் தலைமைகள் இன்று மீண்டும் அரங்கிற்கு வரத் துணிந்துள்ளன. ஆனால் இவர்களுடைய சந்தர்ப்பவாத சமரச அரசியலையும், வாக்கு வேட்டை நடைமுறைகளையும் நாம் நன்கு அறிவோம். எமது உரிமைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பறிக்கப்பட்ட பொழுது பாராளுமன்ற அரசியலில் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு நடைமுறையாகவே அதற்கெதிரான கோஷமெழுப்பினார்கள் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. 77க்குப் பின் அரச பயங்கரவாதம் வலுப்பெற்ற பொழுது அரசுடன் சேர்ந்து நின்று ஆயுதந் தாங்கிய இளைஞர் கூட்டத்தை "பயங்கரவாதிகள்" என்று பிரகடனம் செய்யவும் இவர்கள் தயங்கியதில்லை. உண்மை நிலை என்னவெனில் இவர்கள் தாம் வரித்துக் கொண்டதாகக் கூறிய அகிம்சை வழிப் போராட்டச் சித்தாந்தத்தின் அடிப்படையில் கூட சரியாக மக்களை அணிதிரட்டவில்லை. ஒடுக்கு முறை கூடக்கூட இவர்களது வெகுசன அரசியல் நடவடிக்கைகள் குறைந்து கொண்டு வந்துள்ளன. கடைசியில் சிங்கள இனவாத அரசியல் தலைவர்களுடன் திரை மறைவில் அரசியல் நடாத்திக் கொண்டு தேவைக்கேற்றபடி அரசுக்கு எதிராகவும், சார்பாகவும் அறிக்கை மாத்திரம் விடும் ஓர் கும்பலாகவும் இவர்கள் சீரழிந்து போய்விட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இடதுசாரிகளின் சந்தர்ப்ப வாதமும் தத்துவ வறுமையும்:

இந்தக் கால கட்டத்தில் எமது இடதுசாரிக் கட்சிகளின் தேசிய இனப் பிரச்சினை பற்றிய நிலைப்பாடு இன்னும் மோசமானதாக இருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் ஓரளவு பலம் பொருந்தியதாகக் காணப்பட்ட இடதுசாரிக் கட்சிகள் காலப் போக்கில் பாராளுமன்ற சந்தர்ப்ப வாத அரசியலில் முற்றிலும் அமிழ்ந்து, தம்மை நம்பியிருந்த ஒடுக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் அனைவருக்குமே துரோகம் இழைத்தன. பாட்டாளி மக்களுக்கு அவர்கள் இழைத்த துரோகமும் அதனால் முதலாளித்துவ கட்சிகள் பலமடைந்ததும், இடதுசாரி இயக்கத்திலிருந்த எத்தனையோ நேர்மையான புரட்சிகர சக்திகள் வெளியேறி சிதறுண்டதும் ஈற்றில் முழு இடதுசாரி இயக்கமுமே சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவராலும் நிராகரிக்கப் பட்டதும், இலங்கைத் தீவின் அண்மைக்கால வரலாற்றின் முக்கிய அத்தியாயங்களாகி விட்டன. பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்ட பாரம்பரிய இடதுசாரிகள் சிங்கள இனவாதத்திடம் சரணடைந்ததால் தமிழ் மக்களின் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுக்கவோ சரியான நிலைப்பாட்டை எடுக்கவோ தவறி விட்டனர். புரட்சிகர மார்க்கத்தை முன்னெடுத்த சக்திகள் கூட தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக வரட்டுத் தனமான நடைமுறையைக் கொண்டிருந்தனர். தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றி கருத்துக் கொண்டிருந்தார்களெனினும் அதனை சோஷலிச சமூக அமைப்பிலேயே தீர்க்கலாம் எனக்கூறி, சோஷலிசத்திற்கான போராட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஓர் பகுதியாகப் பார்க்கத் தவறினர். இது எமது சமூக மாற்றம் பற்றியிருந்த இவர்களின் அணுகுமுறைக்கான தத்துவ வறுமையின் வெளிப்பாடே. நீண்ட காலமாக வளர்ந்துவந்த சிங்கள பேரினவாத அடித்தளத்தையும் அதன் சுயாதீனத்தையும் முறியடிக்கும் உறுதியான, உயிரோட்டமான அரசியல் அணுகுமுறை இவர்களுக்கு இருந்திருக்கவில்லை. இந்நிலையில் இடதுசாரி இயக்கத்தின் ஓர் அங்கமாகவிருந்த தமிழ் இடதுசாரிகள், உள்ளே போராடி பலனற்று கசப்புடன் வெளியேறிய பொழுது அது காலம் கடந்ததாகிவிட்டது. காரணம், சரியாகவோ பிழையாகவோ தமிழரின் உரிமைப் போராட்டம் பற்றிப் பேசிய ஒரே ஒரு அரசியல் சக்தியாக கூட்டணியினரே கருதப்பட்டதால் தமிழ் மக்கள் வேறு வழியின்றி அவர்களுக்கே பெரும்பான்மையான ஆதரவை வழங்கினர். கூட்டணித் தலைவர்களின் வர்க்கப் பின்னணிக்கும் அதன் அரசியல் சாராம்சத்திற்கும் சந்தர்ப்பவாத அரசியல் நடைமுறைக்குமிடையே இருந்த தொடர்பினை நன்கு புரிந்து கொண்டவர்கள் தமிழ் இடதுசாரிகளே. இருந்தும் உதிரிகளாகி சிதறுண்டு இருந்த இவர்கள் அமைப்பு ரீதியிலோ, அரசியல் கோட்பாட்டு அடிப்படையிலோ, அரசியல் சக்தி என்ற வகையில் கூட்டணித் தலைமைக்கு



ஓர் மாற்றுத் தலைமையை அளிக்க தம்மை தயார்படுத்திக் கொள்ளவில்லை. தமிழீழப் பிரதேசத்தில் அரசியல் நிகழ்வுகளும் மக்களின் உணர்வும் எங்கோ வளர்ந்து விட்ட நிலையில் அவற்றைத் துரத்திச் சென்று வெறுமனே அரசியல் எதிர்வினை கூறும் பலவீனமான சக்தியாகவே இருந்தனர்.

## நலிவுற்ற அரசியலின் குறைப் பிரசவமே எமது ஆயுதப் போராட்டம்:

கூட்டணியினரின் அரசியல் கருத்தமைவு முழுவதும் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள்வதில் என்ன குறை' என்ற எழுபதுகளில் பிரபல்யமான அவர்கள் கோஷத்தில் தொங்கியுள்ளது. காலங்காலமாக தமிழ் சமூகத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்த ஓர் உயர்சாதி, உயர்வர்க்க குழுவினரிற்கு அரசியல் சலுகைகளை பெற்றுத் தருவதே அவர்களின் நோக்கம். தமிழர் தனிநாடு பெறுவதற்கான நியாயாதிக்கத்தை, தமிழரின் சுயநிர்ணய உரிமையை, தமிழரின் பழம் பெருமை, பழமை பேணும் தமிழ்க் கலாசாரம், தமிழ் இராம்ச்சியம் ஒன்று முன்னிருந்தமை ஆகியவற்றையே பிரதான அடிப்படைகளாகக் கொண்டு விளக்க முற்பட்டனர். கூட்டணியினரின் தேசியவாத அரசியல் பின்னோக்கிய, பிற்போக்கான, குறுகிய சிங்கள மக்கள் விரோத சாராம்சம் கொண்டதென்பதே உண்மை. தமிழ் தேசியத்தினுள்ளே காணப்பட்ட சாதி, வர்க்க, பிராந்திய, சிறுபான்மை அடிப்படையிலான முரண்பாடுகளை தீர்த்து பரந்துபட்ட அளவில் தமிழ் தேசியம் முழுவதையுமே அணிதிரட்டி ஓர் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய கருத்தமைவோ வர்க்க அடிப்படையோ அவர்களிடம் இருக்கவில்லை.

எழுபதுகளின் நடுப்பகுதியில் ஆங்காங்கு உதிரியாக நடைபெற்ற ஆயுதம் தாங்கிய இளைஞர்களின் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகள் ஓரளவு 'ஸ்தாபன' வடிவம் பெறவாரம்பித்தது. அரசுக்கெதிரான எமது போராட்டத்தில் இவ்விளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி நடவடிக்கைகள் ஒரு புதிய பரிமாணத்தை அறிமுகம் செய்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இலங்கைத்தீவின் அரசியல் அரங்கில் தொடர்ந்து நிலைபெறக்கூடிய ஆயுதப் போராட்ட வடிவமொன்று அரங்கேறியது. தமிழ் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்ட முறைமையை ஓர் மாற்று வழியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் சூழலை உருவாக்கியது. ஒடுக்கு முறை அரசினதும் அரச பயங்கரவாதத்தினதும் பேரினவாதத்தினதும் பயங்கரமான சுயரூபத்தை எல்லாப் பரிமாணங்களிலும் மக்கள் புரிந்து கொண்டனர். மிக முக்கியமாக, இவ்விளைஞரின் தொடர்ந்த நடவடிக்கைகள் முற்றுமுழுதாக தமக்கெதிரான ஒடுக்குமுறையை பரிதாபகரமாக ஏற்றுக் கொண்டிருந்த மக்களுக்கு அரசானது வெல்லமுடியாத ஒன்றல்லவென்ற ஓர் விழிப்புணர்வைக் கொடுத்தது. ஆனால் இவை மட்டும் தமிழ் மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்மையான விடுதலைக்கு, அதாவது எல்லா வகையான சமூக அரசியல் ஒடுக்கு முறைகளிலிருந்துமான ஓர் விடுதலைக்கு, பரந்துபட்ட தமிழ் வெகுசனங்களை அணிதிரட்டிச் செல்லும் ஓர் புரட்சிகர மக்கள் யுத்தமாக உருவெடுக்கப் போதுமானவையாக இருக்கவில்லை.

ஆயுதந்தாங்கிய குழுக்களில் பங்குபற்றிய பெரும்பான்மையான இளைஞர்கள் கூட்டணி அரசியலமைப்பின் வெளிவிட்டத்திலிருந்து வந்த தீவிரவாத கருத்துக்களை கொண்டவர்களாவர். கூட்டணித் தலைவர்களின் வேகம் போதாது, ஆயுதப் போராட்டத்தில் அவர்கள் குதிக்கத் தயாராயில்லை என்றே அவர்களைப் பிரிந்து வந்தனரேயன்றி கூட்டணி அரசியலின் சாராம்சத்தை முழுமையாகப் புரிந்து கொண்டவரில்லை. கூட்டணியினரின் அணுகுமுறைகளை விமரிசித்தனரே யொழிய அவர்களின் அரசியல் கருத்தமைவின் உள்ளடக்கத்தை விமர்சித்தனரல்லர். அதன் ஆதிக்கத்திலிருந்தும் விடுபடவில்லை. கூட்டணி மக்கள் மத்தியில் ஓர் அரசியல் சக்தியில்லாமல் போன காலத்திற்குப் பின் அவ்வரசியல் கருத்தமைவின் வாரிசுகளாக ஆயுதந் தாங்கிய குழுக்கள் செயற்படத் தொடங்கின. கூட்டணி அரசியலின் உள்ளடக்கத்தை இவர்கள் முற்றிலும் நிராகரிக்காதது இவர்களும் வர்க்க, சாதி, பிராந்திய வேறுபாடுகளை மீறி பரந்துபட்ட மக்கள் கூட்டத்தினுள் வேரூன்ற முடியாமைக்கு ஒரு காரணமாகியது. ஒரு சில முற்போக்கு அணிகளை திருப்திப்படுத்துவதற்காகவும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகவும் மேலோட்டமாக முற்போக்கு கோஷங்களையும், மார்க்சியக் கருத்துக்களையும் உதிர்த்தாலும் அடிப்படையில் இவ்விளைஞர் குழுக்களில் பழைய பிற்போக்கு தேசியவாத கருத்தமைவுகளே ஆதிக்கம் செலுத்தின.

தமிழீழ மண்ணில் அரசியல் போராட்டம் முதிர்ச்சியடைந்து அதன் உச்ச கட்டமாக ஆயுதப் போராட்டம் பரிணமிக்காமல் வெறுமனே அரசின் ஒடுக்கு முறைக்கு எதிர்வினை கூறும் கிளர்ச்சி நடவடிக்கைகளாகவே அப்போராட்டம் குறுகிவிட்டது. இத்தகையதொரு நிலைமையில் தமிழ் மக்களாகிய நாம் தொடர்ந்தும் பார்வையாளராகவே மட்டும் இருக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டோம். இதற்கு இன்னுமொரு காரணம் தமிழினத்தின் தேசிய (NATIONAL CONSCIOUSNESS ) உணர்வின் வளர்ச்சிக் கட்டமும் அதன் அகநிலைக் குறைபாடுகளுமேயாம். சிங்கள அரசின் தொடர்ச்சியான இனப்படுகொலைத் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட பொழுதிலும் தமிழ் மக்கள், குறிப்பாக வடபகுதியினர் மீண்டும் மீண்டும் தென்னிலங்கையையும் சிங்கள அரசு தரக்கூடிய உத்தியோகங்களையும் கல்வி வாய்ப்புக்களையும் நாடிச் சென்றுள்ளோம். 58, 77, 81, 83 க்குப் பின் தமிழ் மக்கள் உலகெங்கும் அகதிகளாகச் சிதறியோடுவதையே காண்கின்றோம். எமது அரசியல் போராட்டங்களில் கூட



மொழியுரிமையும் உத்தியோக, கல்விச் சலுகைகளுமே முதன்மை பெற்றிருக்கின்றனவொழிய எமது இறைமையைப் பாதுகாக்கக் கூடிய நிலவுரிமைப் போராட்டம் முதன்மை பெறவில்லை. தங்கு நிலை முதலாளித்துவப் பொருளாதாரம் (DEPENDENT CAPITALISM ) எமது சமூக அமைப்பில் ஏற்படுத்திய நலிவுப் போக்குகளும் சீரழிவுகளும் தமிழ் மண்ணின் செழுமையற்ற பொருளாதார அடித்தளமும் இதற்கு முக்கிய காரணங்களாயிருக்கலாம். ஒரு மக்கள் கூட்டமானது ஓர் முதிர்ச்சியுள்ள தேசிய இனமாக முகிழ்க்கும் பருவத்தில் தன்னகத்தேயுள்ள சகல உள்ளார்ந்த பலங்களையும், வளங்களையும் ஒன்று திரட்டி உயிரோட்டமும், வீச்சும் நிறைந்த முற்போக்கான தேசிய உணர்வினைக் கட்டி எழுப்பி தனது சொந்த மண்ணிலேயே நிலைத்து நின்று போராட வேண்டும். இத்தகையதொரு தேசிய உணர்வு தரக்கூடிய வலிமையும், ஆற்றலும் வெறுமனே எதிரியைத் தோற்கடிக்க மாத்திரமல்ல– தனக்குள்ளே காணப்படும் பலவீனங்கள், தடைக்கல்களை தோற்கடிக்கவும் பிரயோகிக்கப்பட வேண்டும். ஆனால் நாம் இத்தகையதொரு ஆரோக்கியமான, வீரியம் நிரம்பிய தேசிய உணர்வினை கட்டி எழுப்பவில்லை. ஒன்றில் பழம் பெருமை பேசும் ஓர் வெற்றுத் தமிழ் தேசியவாதத்தில் தஞ்சம் புகுந்தோம். அல்லாவிடில் இனவாத அரசின் அடிகளைத் தாங்கமுடியாமல் இயலாமையுடன் மலைத்து நின்றோம். தங்குநிலை முதலாளித்துவப் பொருளாதார அமைப்புகள் பலவற்றின் மத்தியதர வர்க்கங்களில் காணப்படும் அறிவு ரீதியான சோம்பேறித்தனமும், ஆன்மீக வறட்சியும் வீரியமற்ற தேசிய உணர்வும் எம்மினத்தில் அதீத அளவிற்கு உருவெடுத்தன. எம்மினத்தின் இயலாமையையும், செயலூக்கமின்மையையும், மந்தநிலையையும் கண்டு வெறுப்புற்ற எமது இளைய தலைமுறையினர்– இனத்தை அதன் கடிவாளங்களால் கைப்பற்றி செயற்பாட்டிற்கு நிர்ப்பந்திக்க முற்பட்டனர். இனத்தை அதன் இயலாமையிலிருந்து மீட்டெடுக்க எடுக்கப்பட்ட கடைசி முயற்சியில் தமது ஆற்றலிலும், கணிப்புக்களிலும் கொண்ட அதீத நம்பிக்கையில் பிறந்த ஓர் ஆத்திர உணர்வுடன் தேசிய விடுதலைக்காக போராடும் உரிமையை மக்களிடமிருந்து தாமே பறித்தெடுத்தனர். 'மக்கள் ஒரு ஆட்டு மந்தைக் கூட்டம் – நாங்கள் போராடுவோம்– எங்களைப் பின் தொடர்வதே மக்களின் பணி' என்பதே அவர்களின் சிந்தனையின் சாராம்சம்.

## அரசியற் தேக்கமும் ஆயுத வன்முறையின் பாய்ச்சலும்:

இவ்வாறு இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் உரிமை ஒரு சில தனி நபர்களின் கைகளில் சிக்கிக்கொண்டது. அரசுக்கெதிராக ஒரு சில வெற்றிகரமான தாக்குதல்களைத் தொடுத்த இக்குழுவினர், பரந்துபட்ட மக்கள் கூட்டத்தினரை அணிதிரட்டும் ஒரு முன்னணியாக வளர்வதை விடுத்து

www.tamilarangam.net



ஆயுத வன்முறையைப் பிரயோகிக்கும் ஒரு பிரத்தியேகக் குழுவினராக உருவெடுத்தனர்.

இது போராட்டம் தொடர்பாக ஓர் சுத்த ராணுவ அணுகுமுறை உருவாவதற்கு வழிவகுத்தது. இத்தகைய சிந்தனையில் தமிழ் இனவாதப் போக்கே மேலாதிக்கம் செலுத்தியது. புரட்சிகர சிந்தனையால் செழுமையேற்றப்படாத ஆயுத வன்முறையானது தேசிய இயக்கமோ, மக்களோ கட்டுப்படுத்த முடியாத- வேறு பல வன்முறைச் செயல்களையும் போக்குகளையும் உருவாக்கி விட்டது. இத்தகைய எதேச்சாதிகார வன்முறைப் போக்கே இன்று மக்கள் மீதான தாக்குதல்கள், கொள்ளைகள், மின் கம்பங்களில் தொங்கும் சடலங்கள், சக போராளிகள் மாற்று இயக்கத் தோழர்களின் கொலைகள் ஆகியவை மலிந்து கிடப்பதற்கு காரணமாகிவிட்டது.

சுத்த ராணுவக் கண்ணோட்டத்தின் பாதிப்பில் உருவாகும் ஆயுத வன்முறையானது சிங்கள இனவாத அரசுக்கெதிரான எமது யுத்தத்தை எந்தெந்த வகைகளில் பாதித்துள்ளது எனப் பார்க்க வேண்டும். ஆயுத நடவடிக்கைகள் ஒரு வெற்றிடத்தில் இடம் பெறுவதில்லை, அவற்றிற்கும் அரசியல் பின்னணிகள், பின் விளைவுகள், தாற்பரியங்கள் உள்ளனவென்பதையும் ஆயுத நடவடிக்கைகளும் அரசியல் நடவடிக்கைகளும் எவ்வகையில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை ஒன்றையொன்று எவ்வகையில் சார்ந்தும், வேறுபட்டும் வளர்கின்றன என்பதையும் எமது இளைஞர் குழுக்கள் பார்க்கத் தவறிவிட்டனர். சரியான அரசியல் வழிகாட்டலில், முழுப் போராட்டத்தினதும் அரசியல் போக்குக்குக் கட்டுப்பட்டதாக ராணுவ நடவடிக்கைகள் அமையவேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாதிருந்தனர். பேச்சளவில் இவற்றை மேலோட்டமாக அங்கீகரித்தாலும், நடைமுறையில் இவர்களது அரசியல் தமது இராணுவ நடவடிக்கைகளின் நியாயப்படுத்தல்களாகவே அமைந்தது. சர்வதேச மேலாதிக்க சக்திகளின் ஆதரவைக் கொண்டுள்ள, பலம் பொருந்திய ஓர் அரசின் இராணுவத்தை வீழ்த்த, பணமும் ஆயுதமும் இருந்தால் போதுமானது என இவ்விடுதலைப் போராட்டத்தை கொச்சையாக அர்த்தப்படுத்தியுள்ளனர்.

மிக முக்கியமாக, தேசியவிடுதலைப் போராட்டத்தின் அச்சாணியாக ஆயுதப் போராட்டம் இருக்கும் அதே வேளையில், மற்றைய போராட்ட வடிவங்களின் முக்கியத்துவத்தையும் அவைகள் எப்படி ஆயுதப் போராட்டத்தை பெலப்படுத்தும் என்பதையும் புரியத் தவறிவிட்டனர். மக்களை வெகுசனப் போராட்டங்களினூடாக அணி திரட்டி, மக்கள் அமைப்புகளை உருவாக்கி, படிப்படியாக அவர்களை ஆயுதப் போராட்டக் களத்திற்குள் இறக்குவதற்கான காத்திரமான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே இவ்வியக்கங்கள் எல்லாம் பெரும்பான்மையான மக்களின் மானசீக ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றிருந்தாலும் இவர்கள் மக்களுக்கு பரிச்சையமில்லாத இரகசிய வாழ்வு வாழ்கின்ற மர்மக் கதாநாயகர்களாகிப் போனார்கள்.

சுருங்கச் சொல்லின் இவர்களது அரசியலின் பிற்போக்குத் தன்மையும் வறுமையும் ஓர் முழுமையான அரசியல் இராணுவ போர்த்தந்திரமொன்றை வகுத்து போராட்டத்தை வழிநடாத்தக்கூடிய அரசியல் பிரக்ஞையற்று தமது ஆயுத நடவடிக்கைகளை தொடர்ந்தனர். தமது ஆயுத நடவடிக்கைகள் அவற்றின் அளவிலும் உத்திநுட்பங்களிலும் வளர்ச்சியடைவதே ஆயுதப் போராட்டம் என மயங்கினர்.

போராட்டத்தைப் பற்றிய ஓர் தூரநோக்கு இல்லாமற்போனது இவ்வியக்கங்களிடையே வேறுபல மோசமான விளைவுகளையும் கொணர்ந்தது. அரசியல் வறுமையினாலும் மக்களிலிருந்து பிரிந்து இயங்கிய 'அமானுஷ்ய' சக்திபடைத்த வீரப் புருஷர்களாகவும் இயங்கிய இத் தனிநபர் குழுக்களின் ஒருமைப்பாடும் வளர்ச்சியும் தனிமனிதர்களைச் சுற்றியே வளர்ந்தது. தனிமனிதர்களின் முக்கியத்துவம் தனிநபர் தலைமைகளின் வழிபாடு, தனிப்பட்டவர்களின் முரண்பாடுகள், குரோதங்கள், அவர்களின் சாதி, வர்க்க, பிரதேசப் பின்னணிகள் ஆகியவற்றைச் சுற்றியே இயக்கங்கள் வளரவும் பிரியவும் தலைப்பட்டன. தனிநபர்களை முக்கியத்துவப்படுத்தி இயக்கங்கள் உடைந்து பிரிந்து - சிதறுவது தமிழீழப் போராட்டத்தின் ஓர் விசேஷ குணாம்சமாகியது. இப்பிரிவுகள் தனிநபர் குரோதங்களை அடிப்படையாக வைத்து எழுந்ததென்பதால் இயக்கங்களிலுள்ள போராளிகள் பொது இலக்கிற்காகப் பாடுபடுகிறவர்கள் என்ற உணர்வின்றி, ஒருவருக்கொருவர் எதிரிகள் என்ற அடிப்படையிலேயே கருதப்பட்டனர். இவ்வியக்கங்களின் ஆரம்ப காலங்களிலேயே தனிநபர் தலைமைகளுக்கு அடிபணிய மறுத்தவர்கள், இயக்கங்களிலிருந்து பிரிந்தவர்கள், தனிப்பட்ட காழ்ப்புணர்வினால் கொல்லப்படுதல் சகஜமாகி விட்டன.

## விடுதலைக் களத்தில் தோன்றிய புதிய ஒடுக்குமுறைகள்

இத்தகையதொரு காலகட்டத்தில் தான் 1983 ஜூலையில் சிறீலங்கா அரசு வரலாறுகாணாத குரூர இனப்படுகொலைச் சம்பவங்களை தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது. 83இன் அழிவுகள், எம்மீது ஏற்படுத்திய பாரிய தாக்கத்தின் விளைவாக நாமாகவே இவ்வியக்கங்களிற்கு ஆதரவைத் தர முன்வந்தோம். முன்னெப்பொழுதும் நாம் கண்டிராதவாறு- இவ்வியக்கங்கள் தமிழுலகமெங்கும் மகத்தான ஆதரவைப் பெற்றன. சிங்களப் பேரினவாதத்தின் குரூரமும் அரசின் கொடிய அடக்குமுறையும் இவ் இயக்கங்களின் குறைபாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கவிடாமல் எம் கண்ணை மறைத்தது. அலை அலையாக இளைஞர்கள் பள்ளிப் படிப்புக்கூட நிறைவேறாத தறுவாயில் இயக்கங்களில் சேர்ந்தனர். 14 வருடங்களாக தமிழ் மண்ணில் இயங்கிவந்த ஆயுதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாங்கிய குழுக்கள் ஒவ்வொன்றும் எண்பத்திமூன்று ஜூலையில் கூடியபட்சம் முப்பது நாற்பது பேரைக் கொண்டனவாகவே இருந்தன. ஆனால் ஓரிரு மாதங்களில் இவ்வியக்கங்களின் மொத்த அங்கத்தவ எண்ணிக்கை ஏறக்குறைய அறுபது எழுபது மடங்காக அதிகரித்தது.

திடீரென்று எண்ணிக்கையில் வளர்ந்த இவ் இயக்கங்களுக்கு தமிழ் மண்ணிற்கு வெளியேயிருந்தும் ஆதரவு கிட்டியது. வெளிநாட்டுத் தமிழரிடமிருந்தும் பொருளுதவிகள் வந்து குவிந்தன. மிக முக்கியமாக தமிழ் நாட்டில் எண்பத்துமூன்றிற்குப் பின் ஈழத் தமிழருக்குக் கிட்டிய மிகப் பெரிய வரவேற்பும் தென்னாசிய உப கண்டத்தில் வல்லரசான இந்திய அரசின் இயக்கங்களுக்குச் சார்பான தலையீடும் எமது போராட்டத்தில் புதிய பரிமாணங்களை அறிமுகம் செய்தன. இந்திய அரசினது உதவிகளும் தமிழ்நாட்டு மக்களது ஆதரவும் இவ்வியக்கங்களை திடீரென்று வளர்த்தன. ஆனால் இத்திடீர் வளர்ச்சியைச் சமாளிக்க இவ் இயக்கங்களின் அக நிலைமைகள் அரசியல் ரீதியாகவோ அமைப்பு ரீதியாகவோ தயாராய் இருக்கவில்லை. இவ்வளர்ச்சி ஆரோக்கியமான சீரான வளர்ச்சியாக இல்லாமல் ஒரு செயற்கை வீக்கமாக இருந்தது. மேலும் ஈழமண்ணிற்குப் புறத்தேயிருந்த சக்திகளிடமிருந்து ஆதரவு கிட்டியதால் தமது சொந்த மண்ணில் தொடர்ந்தும் சார்ந்து நிற்கவேண்டிய தேவையற்றதாகிவிட்டது. தமிழீழ மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டிய அரசியல் சக்திகளாக இவை வளர வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாது போய்விட்டது. மேலும் இச் செயற்கை வீக்கமானது ஏற்கெனவே இயக்கங்களினுள் காணப்பட்ட பிற்போக்குத் தன்மைகளை மேலும் ஸ்திரமடையச் செய்தது.

போதிய பலமில்லாத சிறிய ஆயுதக் குழுக்களாகவிருந்தபோது இவ்வியக்கங்களின் தமிழ் இனவாதமும் குறுந்தேசியவாதமும் வெளிப்பாடடையவில்லை. ஆனால், பெரிய ஸ்தாபனங்களாக வளர்ச்சி பெற்றபின், இவ்வியக்கங்கள் அப்பாவிச் சிங்கள மக்களுக்கெதிராகவும் கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கெதிராகவும் தம் துப்பாக்கிகளைத் திருப்பின. இதில் வேடிக்கையான விடயம் யாதெனில் முஸ்லிம் மக்களை தமிழினத்தின் ஓர் அங்கமாக இவை உரிமை பாராட்டினாலும் இச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. தமிழ் இனவாதம் அடிநாதமாய் இருக்கும்வரை சிங்கள பேரினவாதத்தின் போக்குகளையும் அதன் இயக்கவிதிகளையும் நாம் முழுமையாகப் புரிந்துகொள்ளப் போவதில்லை. அப்புரிதலின் அடிப்படையில் விடுதலைப் போரை வழிநடத்தப் போவதில்லை. முற்போக்கான போர்த் தந்திரத்தை வகுத்து தமது மக்களைப் பாதுகாக்க முடியாத அளவிற்கு வங்குரோத்து அடைந்த இவ்வியக்கங்கள் இனவாதத்தில் தஞ்சம் புகுந்து அப்பாவிச் சிங்கள, முஸ்லிம் மக்களைக் கொன்றுள்ளன. 83க்குப் பின் போராடுவதற்காக ஆயிரக்கணக்காகத் திரண்டுவந்த பல தமிழ் இளைஞரின் உணர்வு முழுவதும் சிங்களவனைக் கொல்லவேண்டும் என்பது மாத்திரமே.



கடந்த பத்து வருடங்களாக நடமாடிவந்த இவ்வியக்கங்கள் எம் விடுதலைப் போராட்டம் பற்றி விதைத்த கருத்துக்களில் இவ்வுணர்வினை முறியடிக்கும் பிரக்ஞை பூர்வமான உணர்வு இருக்காதது மட்டுமல்ல உள்ளார்ந்த ரீதியாக அவர்களும் அதன் கைதிகளாக இருந்தனர். ஆனால் சில இயக்கத் தலைமைகள் இவ்விளைஞர்களின் இனவாத உணர்வுகளுக்கு மேலும் தீனி போட்டு வளர்த்து, அவர்கள் அதன் மூலம் தமது தீர்க்கதரிசனம் அற்ற அரசியலை நியாயப் படுத்த முனைகின்றன.

இவ்வியக்கத் தலைமைகளுக்கும் இந்திய அரசுக்குமிடையிலான உறவானது போராட்டம் பற்றி இவர்களுக்குத் தொலைநோக்கின்மையையும் மக்கள் மீது இவர்களின் அவ நம்பிக்கையையும் இந்திய அரசு பற்றிய இவர்களது புரிந்துணர்வின்மையையும் புலனாக்குகின்றது. இது இவர்களது குறுகிய அரசியலையும் அதன் பிற்போக்குத் தன்மையையும் மேலும் தெளிவாக்குகின்றது. இன்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போக்கு, ஏற்றத் தாழ்வுகள் தமிழீழ மண்ணில் நிர்ணயிக்கப்படுவதில்லை. டெல்லியிலும் சென்னையிலுமே இவை தீர்மானிக்கப்படுகின்றன. ஓர் பிராந்திய வல்லரசான இந்திய அரசு தென்னாசிய உபகண்டத்தில் தன் மேலாதிக்கத்தை செலுத்தும் தன்மை வாய்ந்ததென்பதையும், தனது நலன்களை அனுசரித்தே தமிழீழப் போராட்டத்தை கட்டுப்படுத்த முயலும் என்பதையும் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் அதனிடம் தஞ்சம் புகுந்தனர். மக்களை அணிதிரட்டி மகத்தானதொரு மக்கள் சக்தியைக் கட்டியெழுப்புவதை விடுத்து இத்தகைய அந்நிய சக்திகளில் தங்கியிருப்பது தம்மை எவ்வகையில் பலவீனப்படுத்தும் என்பதை உணர்ந்தாரில்லை. இன்று இவ்வியக்கங்கள் தாம் விரும்பினாற் கூட இந்திய அரசின் தலையீட்டிலிருந்தும் பிடியிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ள முடியாத வகையில் சிக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு இந்திய அரசிடம் சரணடைந்திருப்பது, தமிழீழ மக்கள் மத்தியில்கூட இந்தியா எமக்கு கை கொடுக்கும் என்ற மாயையை ஊட்டுவதாக உள்ளது.

அடுத்து இவ்வியக்கங்களின் தலைமைகளை நோக்குமிடத்து எந்த ஒடுக்கு முறையை எதிர்த்து நாம் போராடப் புறப்பட்டோமோ அதே வகையிலான புதிய ஒடுக்குமுறையொன்றினை தமிழ் மண்ணில் உருவாக்குபவர்களாயுள்ளனர். சிறு கெரில்லாக் குழுக்களின் தலைவர்களாயிருந்த இவ்வியக்கத் தலைமைகள் சொற்ப காலத்தில் பணபலமும் ஆட்பலமும் கொண்ட குறுநில மன்னர்கள் போலாகிவிட்டனர். இத்தனிநபர் தலைமைகள் ஆயிரக்கணக்கான போராளிகளை தம் கீழ்க் கட்டுப்படுத்தி, சகல அதிகாரங்களையும் தாமே சுவீகரித்து விடுதலை இயக்கங்களை தம்மீது தனிப்பட்ட விசுவாசம் கொண்ட இராணுவங்களாக மாற்ற முற்பட்டுள்ளனர். தலைமைக்கு விசுவாசம் என்பது தனிநபருக்கான விசுவாசமாகவே அர்த்தப்படுத்தப்பட்டதே அன்றி ஒடுக்கப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஒரு கூட்டுத் தலைமைக்கான விசுவாசமாக வளர்த்தெடுக்கப்படவில்லை.

இத்தலைமைகள் தம் சொந்த அதிகாரத்தைத் தொடர்ந்து ஸ்திரப்படுத்தவும் நிலைநாட்டவும் தத்தம் இயக்கங்களினுள் சொற்ப அளவில் இருந்த உட்கட்சி ஜனநாயகத்தையும் இல்லாதொழித்தன. இயக்கங்களினுள் விமர்சன அடிப்படையில் எந்தவொரு முற்போக்கான அரசியற் கருத்தும் வளர்ச்சியடைவதைத் தடுத்தன. இயக்கத்தினுள்ளே வெவ்வேறு சாயல்களையுடைய அரசியல் அபிப்பிராயங்களை அனுமதிப்பது தமது தலைமைக்கு ஆபத்தாக முடியுமென்றஞ்சி காத்திரமான அரசியல் சிந்தனையுடைய எல்லோரையும் அடக்கி ஒடுக்கின. நேர்மையான அர்ப்பணிப்பும் மன உறுதியும் படைத்த பல இளைஞர்கள் போராட வந்த பொழுது அவர்களுக்கு எமது விடுதலைப் போராட்டம் பற்றிய அரசியல் பிரக்ஞையை ஏற்படுத்துவதற்கான அரசியல் கல்வி எதுவும் புகட்டப்படவில்லை. காரணம் இப்போராளிகளை அரசியல் மயப்படுத்துவது தமது தலைமை அந்தஸ்துக்கு ஆபத்தாக வந்துவிடும் என இவர்கள் அஞ்சியதுதான்.

இருந்தும் இவர்களது சர்வாதிகாரத் தலைமைகளை மீறி சில நல்ல சக்திகள் இவர்களை விமர்சிக்கவும், வெளியேறி இயங்கவும் தலைப்பட்ட பொழுது அச்சக்திகள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன. சிறீ லங்கா இராணுவத்தின் கொடிய அடக்குமுறைக்கெதிராகப் போராட வந்த பல இளம் போராளிகள் தமது சொந்த இயக்கத் தலைமைகளினாலும் மற்றய இயக்கத் தலைமைகளினாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சர்வாதிகாரத் தலைமைகள் அரசியல் பிரக்ஞையுடைய போராளிகளை இனங் காண்பதற்கும் கண்காணிப்பதற்கும் தமது ஆணையை மீறினால் சித்திரவதை செய்து கொன்றொழிப்பதற்குமென தமக்கு விசுவாசமான ஓர் அடியாட் கூட்டத்தை உருவாக்கியுள்ளன. இயக்கத்தின் 'இராணுவக் கட்டுப்பாட்டை நிர்வகிக்கும் இவ்வுளவுப் படையும் குண்டர் படையும் விடுதலை பற்றி எதுவித புரிந்துணர்வுமில்லாத சுயநலக் கும்பல்களாகும். மனிதநேயம் இல்லாத இக் குண்டர் படைகளுக்கும் 83 ஜூலையில் தமிழ் மக்களை அழித்தொழித்த சிங்கள இனவெறி அமைச்சர்களின் குண்டர்படையினருக்கும் எதுவித வித்தியாசமுமில்லை.

சுத்த இராணுவக் கண்ணோட்டம் இயக்கங்களில் மேலாதிக்கம் பெற்றதாலும் 83க்குப் பின் ஏற்பட்ட அதீத வளர்ச்சியினாலும் இயக்கங்களில் முன்னிலைப் பதவிகளுக்கு வந்த இந்த சுயநலக் கும்பல்கள் எண்ணிக்கையில் சொற்ப தொகையினரெனினும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் இயக்கங்களின் அகநிலைக் காரணிகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தை தம் பக்கம் வைத்துள்ளன.. தமிழ் மண்ணில் தினமும் நாம் காணும் கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள் ஆகியவற்றிற்கு இந்த லும்பன் சக்திகளே ஊற்றுமூலமாகும். ஆயுதப் போராட்டத்தின் அதீத சமச்சீரற்ற வளர்ச்சியின் பக்கவிளைவுகளாக உதித்த இச் சக்திகள் இன்று இயக்கங்களையே சீரழித்து விடுதலைப் போராட்டத்தையே கேலிக்கூத்தாக்கும் நிலைமைக்கு இயக்கங்களில் முக்கிய அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

இன்று சர்வதேசப் போதைவஸ்துக் கடத்தல் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பல தமிழர்கள் ஈடுபட்டிருப்பதும் இயக்கங்களின் பொருளாதாரம் இத்தமிழ் மாஃபியாச் சக்திகளில் தங்கியிருப்பதுவும் ஊரறிந்த இரகசியம். எப்பொழுது எமது போராட்டம் தமிழீழ மண்ணை விட்டு அகன்று முற்றிலும் புறச் சக்திகளில் தங்கியிருக்க விளைந்ததோ அன்றிலிருந்து இத்தகைய தீய சக்திகள் இயக்கங்களை ஊடுருவ ஆரம்பித்துவிட்டன. இன்று இயக்கங்களில் உயர் அந்தஸ்துள்ள லும்பன் சக்திகளுக்கும் இந்த போதைவஸ்துக் கடத்தல் காரர்களுக்குமிடையே இறுக்கமான பிணைப்பு உள்ளது. தமது சொந்த நலனைப் பாதுகாப்பதிலும் வலியுறுத்துவதிலும் இவ்விரு கும்பல்களும் இயக்கங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருக்கின்றன. போதைவஸ்துக் கடத்தலினால் வரும் பணபலம், ஒரு மாஃபியாக் கலாசாரத்தின் தாக்கம் ஆகியவை இயக்கங்களுக்குள்ளே லும்பன் சக்திகளின் ஆதிக்கமும் கொட்டமும் மேலோங்க வழி வகுத்துள்ளது. இன்று போதைவஸ்துக் கடத்தலும் பாவனையும் ஈழ மண்ணை மட்டுமல்ல, போராளிகள் மட்டத்தைக்கூட அடைந்துள்ளதென்பது எவ்வளவு மனச் சஞ்சலத்திற்குரிய விடயம்.

போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் இயக்கங்களினுள்

- இனவெறியும்
- இந்திய அரசின் தலையீடும்,
- போதை வஸ்துக் கடத்தும் கும்பலின் மேலாதிக்கமும் ஊடுருவலும்
- தனிநபர் சர்வாதிகாரத் தலைமைகளும், தலைமை வழிபாடும்
- சாதிப் பிரிவினைகளும்

விஸ்வரூபம் எடுத்துள்ளன.

ஒரே குறிக்கோளுக்காகப் போராடுவதாகக் கூறும் இயக்கங்களிடையே

- மோதல்கள் அடிக்கடி நிகழ்கின்றன.
- இயக்கங்களிற்குள்ளேயும், இடையேயும் போராளிகள் படுகொலை செய்யப்படுகின்றனர்.
- சமூகவிரோதிகள் என்ற பெயரிலும் இயக்கங்களிற்கிடையேயான மோதல்களினாலும் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

www.tamilarangam.net



-இயக்கங்களால் நடாத்தப்படும் கொள்ளைகள், கற்பழிப்புக்கள் மற்றும் அடாவடித்தனங்களுக்கும் மக்கள் ஆளாகியுள்ளனர்.

விடுதலை என்பது ஆயுதப்பயிற்சி பெறுவது, சிங்கள இராணுவத்தை அகற்றுவது என்ற குறுகிய அர்த்தத்தினுள் சிறைப்பட்டுவிட்டது;
ஆயுதம் எடுத்தவர்கள் எல்லோரும் எஜமானர்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது;
காடைத்தனமான லும்பன் சக்திகளின் மேலாதிக்கம் அரசியல் அங்கீகாரம் பெற்றுள்ளது;
மிகமுக்கியமாக, பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி பலம் பொருந்திய வெகுஜனஸ்தாபனமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான காத்திரமான முயற்சிகள் எதுவுமே எடுக்கப்படவில்லை;

விடுதலையை விரும்பும் பல முற்போக்கான தனிநபர்கள், குழுக்கள், வெகுசன ஸ்தாபனங்கள் போராட்டத்தின் பல்வேறு மட்டங்களில் செய்யக்கூடிய பங்களிப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது;
விடுதலைப் போரை தாமே நடாத்தவல்லவர் என்ற அடிப்படையில் விடுதலைப் போரை குத்தகைக்கு எடுத்த மனோபாவம் ஒவ்வொரு இயக்கத்தினுள்ளும் தலைதூக்கியுள்ளது;
அதேநேரத்தில் உண்மைநிலைக்கு முற்றிலும் மாறாக, இயக்கங்களைப் பற்றிய பொய்யானதோர் பிம்பத்தைக் கட்டியெழுப்பும் பிரச்சாரங்களும் தத்துவ விளக்கங்களும் இவ்வியக்கங்களை அண்டிவாழும் உதிரிப்புத்திஜீவிகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வெற்றியடைந்த விடுதலைப் போராட்டங்கள் பலவற்றில் இத்தகைய தவறுகள் ஆங்காங்கே நிகழ்ந்தது உண்மைதான். ஆனால் அங்கெல்லாம் இவை ஒருசில பிறழ்வுகளாக அல்லது விதிவிலக்காகவே நடந்தேறின. போராட்டத்தின் பொதுவான போக்கு ஆரோக்கியமானதாகவே இருந்துள்ளது. ஆனால் எமது போராட்டத்திலோ இத்தகைய தவறுகள் உதிரியாக ஆங்காங்கே நடைபெறுவனவல்ல. தமிழீழத்தில் இன்று போராடும் சக்திகளின் ஒட்டுமொத்தமான அக நிலைமைகளை எடுத்துப் பார்ப்போமேயானால் இத்தகைய 'தவறுகள்' போராட்டச் சக்திகளின் குணாம்சத்தை நிர்ணயிக்கும் பிரதான போக்காக வளர்ந்துள்ளன. இப்பிரதான போக்கின் உள்ளடக்கம் எம்மை அச்சுறுத்தும் வகையில் அப்பட்டமான பாசிசத்தன்மை வாய்ந்ததாகவே உள்ளன.
ஜே.ஆரின் பாசிச அரசை எதிர்த்துப் போராட வந்த தமிழினம் அதே பாசிசத்தின் இன்னொரு வகைமாதிரியை தன் மண்ணில் சிருஷ்டித்துள்ளது. இத்தகையதொரு ஒடுக்குமுறை எமது தேசியத்தினுள்ளே எத்தகையதொரு நெருக்கடியைத் தோற்றுவிக்கும்; ஒன்றாக அணிதிரண்டு போராடவேண்டிய இச் சந்தர்ப்பத்தில், இப்போக்கு, எவ்வெவ் வகைகளில் கூறுகளாக்கும் என்பன பற்றி நாம் காத்திரமாகச் சிந்திக்க வேண்டும்.

அண்மையில் நடந்த அழித்தொழிப்புச் சம்பவம், "ரெலோ, புலி இயக்கத் தலைவரைக் கடத்தியதால் நடந்தேறியது", "ரெலோ இயக்கம் மிக மோசமான கொள்ளைகள் காடைத்தனங்களில் ஈடுபட்டிருந்தது, ஆகவே அதை ஒழித்துக் கட்டுவது பரவாயில்லை" போன்ற அபத்தமான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இச்சம்பவம், ரெலோவிற்கும் புலிகளிற்குமிடையில் ஒரு சங்கிலித் தொடராக கடந்த இரண்டாண்டுகளாக நடந்த மோதல்களின் உச்சக் கட்டமேயாகும். புலி இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு முன் தனது இயக்கம் உடைந்த பொழுது இதே ரெலோ இயக்கத்தில் சேர்ந்து ஒன்றரை வருட காலமாக இயங்கியபின் பிரிந்தார். மே' 84 அளவில் ரெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினத்தைச் சதி செய்து கொல்ல முயற்சித்து, அச்சதி அம்பலமாகி, தோல்வியடைந்தது தமிழீழ அரசியல் வட்டாரங்களுக்கும் இந்திய, தமிழ்நாட்டு அரசுகளுக்கும்கூட தெரிந்த ஓர் கேவலமான உண்மை.
சிறீ சபாரத்தினம் தனது தலைமையை நிலைநிறுத்த தோற்றுவித்த அவருடைய அடியாட்கூட்டமே ரெலோ இயக்கத்தின் பேரில் கொலைகள், கொள்ளைகள் அடாவடித்தனங்களிலீடுபட்டது. 83க்குப் பின், இந்திய அரசின் பிரத்தியேக ஆதரவுடன் 'திடீர் இயக்கம்' ஆனது. இந்திய அரசுக்கு தமிழீழப் போராட்டத்தை அடகு வைக்கும் முயற்சியில் முன்னணியில் நின்றவர் தலைவர் சிறீ சபாரத்தினம். ஆனால் அதே சமயம் ஒப்பீட்டு ரீதியில் பிரபாகரனும் சிறீ சபாரத்தினத்திற்கு எந்தவகையிலும் சளைத்தவரல்லர். இருவருமே தமது அடியாட்களின் உதவியுடன், இயக்கத்தினுள்ளேயும் வெளியேயும் தம்முடன் முரண்படும் போராளிகளைக் கொன்றொழித்துள்ளனர். தத்தம் இயக்கங்களினுள் ஒரேவகையான ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்துள்ளனர்.
புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரனும் அவரது அடியாட்களும்கூட இவர்களின் அணியில் சேரும் தகைமை பெற்றவர்கள் தான். இந்த மூன்று இயக்கத் தலைமைகளுக்குமிடையில் நாம் வேறுபாடு காண முனைவது அர்த்தமற்றது. ஆனால் இப்பாசிச தலைமைகள் தம்மிடையேயுள்ள தனிப்பட்ட குரோதங்களைத் தீர்த்துக் கட்டுவதற்கு இயக்கத்தின் அடிமட்டப் போராளிகளை பலிக்கடாக்களாக்குகின்றனர். மக்கள்பால் உண்மையான அன்புடன் போராட வந்த இப்போராளிகள் இப்பாசிசத் தலைமைகளால் நசுக்கப்பட்டும் அவர்களின் குண்டர் படையினால் கண்காணிக்கப்பட்டும் தொடர்ந்தும் சிங்கள இராணுவத்திற்கெதிராகத் தீவிரமாகப் போராடிக்கொண்டு இருக்கின்றனர். ரெலோ இயக்கத்தின் சீர்கேடுகளுக்காக அவ்வியக்கத்தினை ஒழித்துக்கட்டுவதாகக் கூறிக்கொண்டு ரெலோ இயக்கத் தலைமையின் ஊழல்களுடன் சம்பந்தமற்ற அடிமட்டப் போராளிகளைப் படுகொலை செய்துள்ளனர்.

www.tamilarangam.net



ரெலோ, ப்ளொட், புலி இயக்கங்கள் மூன்றும் ஒரேவகையான பாரம்பரியமும் அரசியல் தன்மையும் வாய்ந்தவை. இம்மூன்று இயக்கங்களிலிருந்தும் வேறுபட்ட அரசியற் பார்வையுடன் உருவாகிய ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய இயக்கங்கள் அடிப்படையில் முற்போக்கானவை. ஆனால் நடுத்தரவர்க்க இளைஞர்களினதும் ஒருசில முற்போக்கான வெளிநாட்டுத் தமிழர்களினதும் ஆதிக்கம் கொண்ட இவ்வியக்கங்களுக்கு பெருமளவில் சோஷலிசம் பற்றியதோர் ஜனரஞ்சகமான உணர்வே இருந்தது; எமது போராட்டம் மக்கள்யுத்தமாக அமைய வேண்டும், அதற்காக மக்களை அணிதிரட்டவேண்டும் என்ற உணர்வும் இருந்தது. ஆனாலும் இதை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் தத்துவ ஆழமும் எம்மினத்தின் சமூக பொருளாதார அடிப்படைகளைப் புரிந்து, ஓர் அரசியல்-ராணுவ மூலோபாயத்தை வகுக்கும் ஆற்றலும் இவர்களுக்கு இருக்கவில்லை. இவர்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களைக் கண்டித்த அதேவேளை இவர்களிடம் மக்களை ஆயுதப்போராட்டத்திற்கு இறக்குவதற்கான விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளெதுவும் இருக்கவில்லை. 83க்குப் பின் ஏற்பட்ட புதிய சூழலில் எம் மண்ணில் உறுதியாக வேரூன்றி நின்று மக்களை அணிதிரட்டுவதை விடுத்து பெரிய இயக்கங்களுக்குச் சமமான சக்திகளாக விரைவில் வளரவேண்டும் என்னும் அவாவினால் இந்திய அரசிலும், ஒருசில தமிழ்ப் பிற்போக்கு சக்திகளிலும், தமிழக அரசியல்வாதிகளிலும் சார்ந்து நிற்கத் தொடங்கினர். மேற்கூறிய பலவீனங்கள் அதுவும் முக்கியமாக எமது போராட்டம் பிராந்திய வல்லரசான இந்தியாவின் ஆதிக்கத்தில் பெருமளவு தங்கும் நிலைக்கு வந்ததில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இதனால் தமிழீழ விடுதலையை இவர்கள் இந்திய அரசின் கண்களுக்கூடாகவே பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் செயற்கை வீக்கத்தினால் ஏற்பட்ட நச்சுச் சூழலின் பாதிப்பு இவ்வியக்கங்களிலும் இன்று தென்படுகின்றது.

இவற்றைவிட தூரதிருஷ்டியுடன் இயங்கமுற்பட்ட சில சிறிய இயக்கங்கள் மிகவும் வேகமாக மாறிவந்த சூழலிற்கு முகம் கொடுத்து மக்களை அணிதிரட்டுவதில் வெற்றியடையாதபோதும் அடிப்படையில் சில உறுதியான தன்மைகளைக் கொண்டுள்ளன.

## இருளிலும் சில ஒளிக் கீற்றுக்கள்:

தினமும் அதிகரித்துவரும் ராணுவ பெலமும் அரசின் ஒடுக்குமுறையும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தவிர்க்கமுடியாதது என்பதனை அறைகூவுகின்றன. விடுதலைப் பாதையில் வேகமாக முன்னேறவேண்டிய இச்சந்தர்ப்பத்தில் இத்தகையதொரு அந்தகார நிலைமை தோன்றியுள்ளமை போராட்டத்தின் வெற்றி பற்றிப் பல ஐயங்களை எழுப்பலாம். ஆனால் இனிமேலும் இழப்பதற்கு எதுவுமற்ற தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.



நீண்டகாலமாக ஒடுக்குமுறைக்கு முகம்கொடுத்து நிற்கும் எம்மினம் பெற்ற ஒட்டுமொத்தமான அனுபவம் அதனளவில் செழுமையானது. போராட்டச் சக்திகளின் அகநிலைக்காரணிகள் பெருமளவிற்கு விரக்தியை ஊட்டுவனவாக இருந்த பொழுதிலும் பக்கவிளைவுகளாக பல சாதகமான அம்சங்களும் உருவாகியுள்ளன. இச்சாதகமான அம்சங்களை அத்திவாரமாகக் கொண்டு, ஆரோக்கியமான சக்திகள் போராட்டத்தை சரியான தடத்திற்குத் திருப்ப முயலவேண்டும்.

இன்று தமிழீழத்தில் இனவாத அரசின் ஆயுத பலத்தை நின்று எதிர்கொள்ளக் கூடிய இளைஞர் அணியொன்று உருவாகியுள்ளது. இவ்விளைஞர்கள் தமது தலைமைகளின் அழிவுவேலைகளையும் மீறி மக்கள்பாலுள்ள தமது கடமையை உணர்ந்ததனால் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். தற்காலிகமாக இவர்கள் பெறும் வெற்றிகள்கூட சிங்கள ராணுவத்தை நிலைகுலைய வைத்துள்ளது போராட்டத்தின் ஒரு சாதகமான அம்சமே. இயக்கங்களினுள் ஏற்பட்ட சீரழிந்த நிலைமைகளினால் 'ஏதோ போராடி மடிவோம்' என்ற ரீதியில் இவர்கள் தொடர்ந்து களத்தில் நிற்கும் நிலை மாற்றப்படல் வேண்டும். இவ்வணிகள் பிரிந்துநின்று போராடாமல் நீண்டகால தரிசனமுள்ள ஒரு தலைமையின்கீழ் ஒருமைப்பாடுடைய ஒரு விடுதலை இராணுவமாகப் பரிணமிப்பதே இவர்களின் தொடர்ந்த வெற்றியை உறுதி செய்யும். போர்க்கலையில் பெற்ற தேர்ச்சியும் இயக்கங்களின் பலவீனங்களால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களிலிருந்து பிறந்த ஒரு முதிர்ச்சியும் இவர்களுடைய தொடர்ந்த பங்களிப்புக்கு சாதகமான அம்சங்களாகும்.

மேலும், இவ்வளவு காலமும் வீட்டுக்குள்ளேயே ஒடுங்கிக் கிடந்த தமிழ்ப் - பெண்கள் இன்று, சமூகத் தடைகளையும் மீறி போராட்டத்தின் பல்வேறு மட்டங்களில் பங்களிக்க முன்வந்துள்ளனர். இப்போராட்டத்தினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத, நல்லம்சம்வாய்ந்த விளைவுகளில் இதுவும் ஒன்று. எந்தவொரு இயக்கத்திற்கும் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு எப்படி முழுமையடையலாம், அதனூடாக பெண்கள் எவ்வாறு தமக்கெதிரான சமூகத் தடைகளை களைந்தெறியலாம் என்பது பற்றிய பிரக்ஞைபூர்வமான அணுகுமுறை இல்லாவிடினும் தமிழ் சமூகத்தில் ஆணாதிக்கவாதம் தொடர்ந்தும் நிலைகுலையாதிருப்பினும், பெண்கள் தாமாகவே அமைப்புக்களை உருவாக்கி இயங்குவதும் அவ்வமைப்புக்கள். போராட்டத்தின் பல்வேறு மட்டங்களில் பங்களிப்பதும் மிகவும் நம்பிக்கையூட்டும் அம்சம்.

போராட்டம் உருவாக்கிய நெருக்கடி நிலைமைகளினால் இயக்கங்கள் தயார்நிலையில் இல்லாதிருந்த பொழுதிலும் பல மக்கள் அமைப்புக்கள் சுயமாக உருவாகியுள்ளன. இயக்கங்களின் அழிவு வேலைகளைக் கட்டுப்படுத்தக் கூடியதொரு ஆளுமையை இவ்வமைப்புக்கள் வளர்த்துக்கொள்ளுமேயானால், போராட்டம் ஆரோக்கியமான பாதையில் செல்வதற்கு இவ்வமைப்புக்களும் ஓர் உந்துசக்தியாக அமையும்.

www.tamilarangam.net



இயக்கங்களும்கூட இன்றுள்ள நெருக்கடி நிலைமைகளினால் ஓரளவுக்கு மக்கள் மத்தியில் வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. தமது தொடர்ந்த இருப்பை நியாயப்படுத்துவதற்காகவும் ஒன்றுக்கொன்றிடையிலேயான போட்டியில் மக்களிடம் தம் செல்வாக்கை வளர்க்கவும் மக்கள் மத்தியில் இறங்கியுள்ளன. தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய சில பிரச்சாரங்கள், பொருளுற்பத்தி முயற்சிகள், அரசு நிர்வாகம் ஸ்தம்பித்த வேளை - நிர்வாக அமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்கான சில முயற்சிகள் போன்றவை இதற்கு உதாரணங்களாகும். மக்களின் நலனைப் பிரதானப்படுத்தி இம்முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தால் இவை இயக்கவேறுபாட்டையும் மீறி பொது மக்களமைப்புக்களாகப் பரிணமித்திருக்கலாம். இயக்கங்களின் எட்டிக்குப் போட்டி மனோபாவத்தினால் தத்தம் முத்திரைகளை இம்முயற்சிகளுக்குப் பதிக்க எண்ணுகின்றன. இதனால் இத்தகைய முயற்சிகளிலும்கூட மக்கள் மீண்டும் பார்வையாளராகவே இருக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

தென்னிலங்கையில் அரசியல் பொருளாதார நெருக்கடி தீவிரமாகிக் கொண்டு வருதலும் எமக்கு மிகவும் சாதகமான அம்சமாம். சிங்கள மக்கள், பொதுவில், ஜே.ஆரின் அரசில் நம்பிக்கை இழந்து வருகின்றனர். இந்நம்பிக்கையீனத்தை சிங்கள வெறிச் சக்திகள் பயன்படுத்துவதற்கு நிறைய இடமுண்டு. ஆனாலும் அங்குள்ள முற்போக்குச் சக்திகளின் உறுதியான நிலைப்பாடும் எமக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுதலும், இணைந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதலும் இப்போக்கை தடுத்து நிறுத்தும்.

இயக்கத் தலைமைகளின் தவறான போக்குகளை இனம்கண்டுகொண்ட போராளிகள் பலர் போராட்ட நிலைமைகளாலும், வேறு வழி தெரியாததாலும் தொடர்ந்து இவ்வியக்கங்களிற் பங்காற்றுகின்றனர். இவர்களுடைய நேர்மையான உழைப்பும் அர்ப்பணிப்புமே இப்பாசிசத் தலைமைகள் மேலும் நிலைபெறுவதற்குச் சாதகமாயுள்ளன. இவர்களுடைய பங்களிப்புக்கள் மேலும்மேலும் ஒருசில சுயநலக் கும்பல்களின் மேன்மைக்காகப் பயன்படாமல் சரியான ஒரு தலைமைக்குள் அணிதிரட்டப்பட வேண்டும். அதே வேளையில் தலைமைகளில் அதிருப்தி கொண்டு பெரிய இயக்கங்களிலிருந்து போராளிகள் வெளியேறியவண்ணம் இருக்கின்றனர், இவர்கள் நடைமுறை அனுபவ வாயிலாக தம் இயக்கங்கள் விட்ட தவறுகளைப் புரிந்துகொண்டவர்கள். ஆகவே அந்நிலைப்பாடுகளில் உறுதி கொண்டவர்கள். இயக்கத் தலைமைகள் இவர்களைக் கொன்றொழிப்பதற்கு தேடுதல் வேட்டைகள் நடத்திக்கொண்டிருக்கின்ற பொழுதிலும் இவர்களில் பலர் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

மேலும் போராட்டக் களத்தில், இராணுவ ரீதியாகப் பலம் குன்றிய, ஆனால் நீண்டகாலக் கண்ணோட்டமுள்ள இயக்கங்கள் சில உள்ளன. இவை இன்றைய காலகட்டத்திற்குத் தேவையான சரியான தலைமையைக் கொடுக்கும் வண்ணம் எல்லாப் பரிமாணங்களிலும் சீராக வளர்ந்தவையல்லாவிடினும் மேற்கூறிய பல்வேறு ஆரோக்கியமான சக்திகளுடன் இணைந்து, சரியான மார்க்கத்தினடிப்படையில் பொது அமைப்பினுள் அணிதிரளவும்; பெரிய இயக்கங்களிலேயுள்ள சரியான சக்திகளின் பலம் ஓங்க உந்துசக்திகளாகவும்; மக்களுக்கு நம்பிக்கையூட்டி போராட்டத்தை அழிவுப்பாதையில் இருந்து மீட்கும் கடப்பாடு உடையவர்களாகவும் உள்ளன.

பல்வேறு இயக்கங்களின் இருப்புகளைக் கண்டு குழம்பிய நிலையிலுள்ள மக்களின் உணர்வுகளை சாதகமாகப் பயன்படுத்தி, தமது இராணுவ பலத்தைப் பிரயோகித்து இச்சக்திகளை இயங்கவிடாது தடுக்கும் முயற்சிகளை இப்பாசிசத் தலைமைகள் முனைப்பாக எடுத்து வருகின்றன. இந்நிலையில், தமது பங்களிப்பைச் செய்ய அவர்கள் எதிர்நோக்கும் தடைகள் ஏராளம்.

வெளிச் சக்தியிலோ அல்லது சர்வதேச அரசியல் அற்புதங்களிலோ நம்பிக்கை கொள்ளும் எந்தவொரு தேசமும் சுதந்திரத்திற்கு அருகதையற்றது.

எண்ணிக்கையிற் சிறிய இனம் பெரிய இனத்தைத் தம் பலத்தின் துணைகொண்டு மட்டும் விடுதலை அடைந்திராத உலக வரலாற்றில், புதிய வரலாற்றை உருவாக்க முனையும் நாம், பல்வேறு போராட்டங்களின் படிப்பினைகளையும் உதாசீனம் செய்து, கடந்த பதினைந்துவருட காலங்களிலும் அநாவசியமான தவறுகளை இழைத்துள்ள துர்ப்பாக்கிய நிலையிலேயே உள்ளோம்.

ன்றைய நிலை, தற்போதய இடைக்கட்டம் ஓர் இயக்கப்போக்கின் ஒரு
புள்ளியே.
ரலாறு உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.
துவும், ஏங்கள் வரலாறு உருவாக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை
னைவிற்கொண்டு; மக்களின் பூரண விடுதலையைப் பெறுவதிலுள்ள தடைகளை
திர்கொள்ளவேண்டி- சரியான பிரக்ஞையுடன் தற்காலிக பின்னடைவுகளை
மனந்தளராது வெற்றி கொள்வோம்.

ாசிச தலைமைகளை தனிமைப்படுத்துவோம்!
னைத்து இயக்கங்களிலுமுள்ள ஜனநாயக சக்திகளின் கை ஓங்க உழைப்போம்

க்களைச் சென்றடைவோம்! மண்ணினை மீட்டெடுப்போம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகலின் நலிவு இருளின் வலிவு.
இன்னும் ஒருமுறை இரவு வெல்லும்.
ஓங்கும் மரங்கள், இலைகளில் இரவு
காயத், தீய்ந்து கரியாய் மாறும்.
நெடிய தென்னை தலையை விரிக்கப்
பேய்கள் அஞ்சி ஒடுங்கி நிற்பன.
சின்ன வண்டுகள் சில்லென அலறத்
தவளைகள் மேனி நடுக்கங் கேட்கும்.
வான வெளியில் நிலவு தடுக்கி
மேகக் குளத்தில் வீழ்ந்து மூழ்கும்.
இருளோ இன்னும் இன்னுஞ் சூழும்.

நீண்ட பயணம் போக வேண்டும்–
விழிகள் மெல்லக் குருடாய் மாற
இடறுங் கால்கள் வழியைத் தேடும்.
நாளைக் காலை விடியக் கூடும்.
கால்கள் விரைவாய்ப் போகவும் கூடும்.
இருளை மீறி இரண்டு அடிதான்
முன்னே போக முடியினும் போவேன்.
விடியலைக் காத்து நிற்குமோ காலம்?

மூலம்:
பதினொரு
– ஈழத்துக் கவிஞர்கள் –



லண்டன் தொடர்புகட்கு:
BM BOX 9376
LONDON WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்